# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

*(2004 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*


*2004, நவெம்பர் மாதம் 19 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 10.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2004 ஆம் ஆண்டின் 14 இலக்க, தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்*

*[2004 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச. வ. ஓ. 23/2004*
*4825*

**தேருநர் ஒருவரால் வாக்கெடுப்பில் ஒரு செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றைக் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம், (262) ஆம் அத்தியாயமான உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மக்கள் தீர்ப்புச் சட்டம் ஆகியவற்றைத் திருத்துவதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்க ளுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** *இச்சட்டம், 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என் பதுடன் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அரசியலமைப்பு ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஒரு பாராளுமன்றச் சட்டமாக சான்றளிப்பு தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்று முடிவடைவதன்மீது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

### பாகம் I

### பொது

*தேர்தல் ஆணைக் குழுவால் சான்றுப் படுத்துகை.*

***2.*** *(1) தேர்தல் ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் ஏற்பாடு கள் நடைமுறைக்கு வருமுன்னர், வாக்களிக்க உரித்துடைய எல்லா ஆட்களும் ஆளடையாள அட்டையைப் பெறுவதிலிருந்தும் தங்கள் வாக்குரிமையைப் பிரயோகிப்பதிலிருந்தும் விலக்கப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கு 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் ஆளடையாள அட்டைகளை வழங்குதல் தொடர்பில் எல்லா நிர்வாக ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என அதனைத் திருப்திப்படுத்தி அத்தகைய நிகழ்வை சான்றுப்படுத்துதலும் அத்தகைய சான்றுப்படுத்துகையை கசெற்றில் வெளியிடுதலும் வேண்டும் :*

ஆயின், எவ்வாறாயினும் தேர்தல் ஆணைக்குழு அத்தகைய சான்றுப்படுத்துகைக்கு முன்னர் ஆளடையாள அட்டைகளை வழங்குவதற்காக செய்யப்பட்டுள்ள நிர்வாக ஏற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளுடைய கருத்துக்களை முறையாக கருத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(2) தேர்தல் ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சான்றுப் படுத்துகையை வெளியிடுவதற்குமுன் இப்பிரிவின் நியதிகளின் படி எதிர்பார்க்கப்பட்ட நிருவாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்ற நிகழ்வை சான்றுப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் ஆணைக்குழுவுக்கு உறுதிப்படுத்துமாறு 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும். ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளரின் சான்றுப் பத்திரமானது, எல்லாத் தேர்தல் மாவட்டங்கள் தொடர்பிலும் இப்பிரிவின் நியதிகளின்படி எதிர்பார்க்கப்பட்ட நிருவாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அவரால் பெறப்பட்ட அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றை முன்வைப்பதற்கான தேவைப்பாடு.

**3.** வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணானது எது எவ்வாறிருப்பினும் -

(அ) 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்துக்கான உறுப்பினர்களின் தேர்தலுக்காக நடாத்தப்பெறும் ஏதேனும் தேர்தலில் தேருநர் ஒருவராக ; அல்லது

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 2 ம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் மாகாணசபைகளுக்கான உறுப்பினர்களின் தேர்தலுக்காக நடாத்தப்படும் ஏதேனும் தேர்தலில் தேருநர் ஒருவராக ; அல்லது

(இ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் அந்தந்த உள்ளூரதிகார சபை உறுப்பினர்களின் தேர்தலுக்காக நடாத்தப்பெறும் ஏதேனும் தேர்தலில் தேருநர் ஒருவராக ; அல்லது

(ஈ) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் சனாதிபதி ஒருவரின் தேர்தலுக்காக நடாத்தப்பெறும் ஏதேனும் தேர்தலில் தேருநர் ஒருவராக ; அல்லது

(உ) 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் நடாத்தப்பெறும் மக்கள் தீர்ப்பொன்றில் வாக்காளர் ஒருவராக,

இருப்பதற்குத் தகைமைபெற்ற ஒவ்வோராளும், இச்சட்டம் நடைமுறைக்குவந்த தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அத்தகைய வாக்காளருக்கு வாக்குச்சீட்டொன்று வழங்கப்படுமுன்னர் இயைபான வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமைதாங்கும் அலுவலருக்கு அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் செயலாற்றும் ஆளொருவருக்கு செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றைக் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

**4.** மூன்றாம் பிரிவின் நோக்கத்திற்காக 'செல்லுபடியான ஆளடையாள ஆவணம்' என்பது இலங்கை அரசாங்கத்தினால் எந்நோக்கத்துக்காகவேனும் ஏதேனும் சட்டத்தைப் பின்பற்றி வழங்கப்பட்டதான எவ்வாவணத்தைக்கொண்டு அதனை வைத்திருப்பவரின் ஆளடையாளத்தை நிச்சயித்துக்கொள்ள முடியுமோ அவ்வேதேனும் ஆவணம் என்று பொருளாகும் என்பதுடன் வேறேதேனும் ஆளடையாள ஆவணத்தைத் தம்மகத்தே கொண்டிராத ஆளொருவரின் புகைப்படமென விடயத்திற்கேற்ப கிராம அலுவலரால் அல்லது தோட்ட அத்தியட்சகரால் சான்றுப்படுத்தப்பட்டதும் அத்தகைய ஆள் வதியும் பிரதேசச் செயலாளரின் பிரிவின் அந்தந்த பிரதேசச் செயலாளரால் அல்லது அதன் சார்பில் தேர்தல் ஆணையாளரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் சான்றுதிப்படுத்தப்பட்டதுமான அத்தகைய ஆளின் புகைப்படத்தை உள்ளடக்குதல் வேண்டும். பொருள் கோடல்.

இவ்வேற்பாடு நடைமுறைப்படுத்தப்படும் காலமானது, அத்தகைய ஆணைக்குழுவின் நியமனத்தின் பின்னர் அவசியமானோரும் இயைபானவர்களுமான தனியாட்களுடனான கலந்தாலோசனையுடன் தேர்தல் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

தவறுகள்.

5. (அ) வேறேதேனும் ஆளடையாள ஆவணத்தைத் தம்மகத்தே கொண்டிராதவரும் பொய்யான தகவலின் அடிப்படையில் ஆளடையாள ஆவணமொன்றுக்கு வேண்டுகோளொன்றைச் செய்கின்றவருமான ; அத்துடன்

(ஆ) ஆளடையாள ஆவணமொன்றைத் தம்மகத்தே கொண்டிராத ஆளொருவரின் வேண்டு கோளொன்றின்மீது புகைப்படமொன்றை பொய்யான சான்றுப் படுத்துகையாக அல்லது சான்றுறுதியாக சான்றுப் படுத்துகின்ற அல்லது சான்றுறுதி செய்கின்ற

ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஒரு மாதத்திற்குக் குறையாததும் ஓராண்டிற்கு மேற்படாததுமான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் II

## 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்துக்கான திருத்தங்கள்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அஅ) வாக்காளரின் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்று பரிசோதனை செய்யப்பட்டு பெயரும் ஆளடையாளமும் நிச்சயிக்கப்படுதல் வேண்டும்.".

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தோதான பரிசோதனையைச் செய்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தோதான குறியீட்டின் அல்லது ஆளடையாள ஆவணத்தின் பரிசோதனையைச் செய்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அத்தகைய வாக்காளருக்கு தோதான குறியீடு ஏற்கனவே இடப்பட்டுள்ளதென்பதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒன்றில் அத்தகைய வாக்காளருக்கு தோதான குறியீடு ஏற்கனவே இடப்பட்டுள்ளதென்பதை அல்லது வாக்காளரின் ஆளடையாளம் பற்றிய சந்தேகம் எழச்செய்கின்ற நிகழ்வுகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் படிவம் ஈ என்பதில் அப்படிவத்திலுள்ள "வாக்குச்சீட்டை ஒப்படைக்காததற்கான ஏது" என்னும் தலைப்பைக் கொண்ட நிரையின்கீழ் "செல்லுபடியான ஆளடையாள ஆவணமில்லை அல்லது ஆளடையாளம் எண்பிக்கப்படவில்லை" என்னும் புதிய தலைப்பைக் கொண்ட புதிய நிரையை சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையின் படிவம் ஈ என்பதனைத் திருத்துதல்.*

## பாகம் III

## 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துதல்

**9**. இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 35 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

*1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(அஅ) வாக்காளரின் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்று பரிசோதனை செய்யப்பட்டு பெயரும் ஆளடையாளமும் நிச்சயிக்கப்படுதல் வேண்டும்,".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தோதா பரிசோதனையைச் செய்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தோதான குறியீட்டின் அல்லது செல்லுபடியான ஆளடையாள ஆவணத்தின் பரிசோதனையைச் செய்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அத்தகைய வாக்காளர் ஏற்கனவே தோதான குறியினால் அடையாளமிடப்பட்டுள்ளாரென" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒன்றில் அத்தகைய வாக்காளர் ஏற்கனவே தோதான குறியினால் அடையாளமிடப்பட்டுள்ளாரென்பதனை அல்லது வாக்காளரின் ஆளடையாளம் பற்றிய சந்தேகம் எழச் செய்கின்ற நிகழ்வுகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையின் படிவம் இ என்பதனைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் இ என்னும் படிவத்தில் "வாக்குச் சீட்டை ஒப்படைக்காததற்கான ஏது" என்னும் தலைப்பைக் கொண்ட நிரையின்கீழ் "செல்லுபடியான ஆளடையாள ஆவணமில்லை அல்லது ஆளடையாளம் எண்பிக்கப்படவில்லை" என்னும் தலைப்பைக் கொண்ட புதிய நிரையைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

## பாகம் IV

## 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துதல்

*1988 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 35 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"(அஅ) வாக்காளரின் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்று பரிசோதனை செய்யப்பட்டு பெயரும் ஆளடையாளமும் நிச்சயிக்கப்படுதல் வேண்டும் ;".

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத் தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தோதான பரிசோதனையைச் செய்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தோதான குறியீட்டின் அல்லது செல்லுபடியான ஆளடையாள ஆவணத்தின் பரிசோதனையைச் செய்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அத்தகைய வாக்காளருக்கு தோதான குறியீடு ஏற்கனவே இடப்பட்டுள்ளதென்பதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வாக்காளருக்கு தோதான குறியீடு ஏற்கனவே இடப்பட்டுள்ளதென்பதை அல்லது வாக்காளரின் ஆளடையாளம் பற்றிய சந்தேகம் எழச்செய்கின்ற நிகழ்வுகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் படிவம் ஈ என்பதில், அப்படிவத்தில் "வாக்குச்சீட்டை ஒப்படைக்காததற்கான காரணம்" என்னும் தலைப்பைக்கொண்ட நிரையின்கீழ் "செல்லுபடியான ஆளடையாள ஆவணமில்லை அல்லது ஆளடையாளம் எண்பிக்கப்படவில்லை" என்னும் தலைப்பைக்கொண்ட புதிய நிரையைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத் திற்கான முதலாம் அட்டவணையின் படிவம் ஈ என்பதனைத் திருத்துதல்.*

## பாகம் V

## (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்கான திருத்தங்கள்

**15.** இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 52 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *262 ஆம் அத்தியாயத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் :—

"(1அ) வாக்கெடுப்பு நிலையமொன்றின் தலைமை தாங்கும் அலுவலர் அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் செயற்படும் ஆளொருவர், எவரேனும் வாக்காள

ருக்கு வாக்குச்சீட்டு கொடுக்கப்படுவதற்கு முன்னர் அவரது பெயரையும் ஆளடையாளத்தையும் நிச்சயப் படுத்துவதற்கென செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றைக் காண்பிக்குமாறு வாக்காளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.";

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "அத்தகைய ஏதேனும் வெளிப்படுத்து கையைச் செய்ய மறுப்பாராயின்" என்னும் சொற்க ளுக்குப் பதிலாக, "அத்தகைய ஏதேனும் வெளிப் படுத்துகையை செய்ய அல்லது செல்லுபடியான ஆள டையாள ஆவணமொன்றைக் காண்பிக்க மறுப் பாராயின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

(இ) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில் "வெளிப்படுத்துத லைச் செய்யுமாறு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வெளிப்படுத்துதலைச் செய்யுமாறும் செல்லுபடி யான ஆளடையாள ஆவணமொன்றைக் காண்பிக்கு மாறும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 53அ என்பதனைத் திருத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 53அ இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தோதான பரிசோதனை செய்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தோதான குறியீட்டை அல்லது செல்லுபடியான ஆளடையாள ஆவ ணத்தைப் பரிசோதனை செய்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி யில் "அத்தகைய வாக்காளருக்கு தோதான குறியீடு ஏற்கனவே இடப்பட்டுள்ளதென்பதை" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "ஒன்றின் அத்தகைய வாக்காள ருக்கு தோதான குறியீடு ஏற்கனவே இடப்பட்டுள்ள தென்பதை அல்லது வாக்காளரின் ஆளடையாளம் பற்றிய சந்தேகம் எழச் செய்கின்ற நிகழ்வுகளை" என் னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான ஏழாவது அட்டவணையைத் திருத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணை "வாக்குச்சீட்டை ஒப்படைக்காததற்கான காரணம்" என்னும் தலைப்பைக்கொண்ட நிரையின்கீழ் "செல்லுபடியான ஆளடை யாள ஆவணமில்லை அல்லது ஆளடையாளம் எண்பிக்கப்பட வில்லை" என்னும் தலைப்பினைக்கொண்ட புதிய நிரையொன் றைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

## பாகம் VI

### *1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மக்கள் தீர்ப்புச் சட்டத்திற்கான திருத்தங்கள்*

***18.*** இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவில் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

*1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(அஅ) வாக்காளரின் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்று பரிசோதனை செய்யப்பட்டு பெயரும் ஆளடையாளமும் நிச்சயிக்கப்படுதல் வேண்டும்.".

***19.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தோதான பரிசோதனையைச் செய்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தோதான குறியீட்டின் அல்லது செல்லுபடியான ஆளடையாள ஆவணத்தின் பரிசோதனையைச் செய்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அத்தகைய வாக்காளர் ஏலவே தோதான குறியீட்டினால் குறியிடப்பட்டுள்ளவர் என" என்னும் சொற்களுக்குப்பதிலாக, "ஒன்றில் தோதான குறியீடு ஏற்கனவே இடப்பட்டுள்ளதென்பதை அல்லது வாக்காளரின் ஆளடையாளம் பற்றிய சந்தேகம் எழச் செய்கின்ற நிகழ்வுகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

***20.*** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணை, அவ்வட்டவணையின் படிவம் ஆ என்பதில் "வாக்குச்சீட்டு ஒப்படைக்கப்படாததன் காரணம்" என்னும் தலைப்பைக்கொண்ட நிரையின்கீழ் "செல்லுபடியான ஆளடையாள ஆவணமில்லை அல்லது ஆளடையாளம் எண்பிக்கப்படவில்லை" என்னும் தலைப்பைக் கொண்ட புதிய நிரையொன்றைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையின் படிவம் ஆ என்பதனைத் திருத்துதல்.*

***21.*** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்